Registered as a News Paper in Sri Lanka பக்கங்கள்: 04 விலை ரூபா: 4-50

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம்: 02 திருவள்ளுவர் ஆண்டு 2022 ஆடி 21 (06 - 08 - 1991) செவ்வாய்க்கிழமை ஓசை: 169

## கர்நாடக மாநிலத்திலும் இல. தமி. மீது கட்டுப்பாடு

(பெங்களூர்)

கர்நாடக மாநிலத்தில் இலங்கைத் தமிழர்கள் தங்கியிருப்பதைக் கட்டுப்படுத்தி முறைப்படுத்த மாநில அரசு உத்தேசித்திருப்பதாக முதலமைச்சர் எஸ். பங்காரப்பா செய்தியாளரிடம் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில், அண்மையில் பெங்களூரில் விடுதலைப்புலிகள் எனச் சந்தேகிக்கப்பட்ட இருவர்

(4ஆம் பக்கம் பார்க்க)

# புல்லாவெளியில் புலிகள் அதிரடி; இராணுவ காவலரண்கள் நிர்மூலம்

## பல படை பலி; 21 புலிகள் வீரமரணம்

(இயக்கச்சி)

புல்லாவெளியில் தரித்துள்ள சிறிலங்கா இராணுவத்தினரின் காவல் அரணகள்மீது விடுதலைப்புலிகள் நேற்று அதிகாலை மேற்கொண்ட திடீர்த் தாக்குதலில் சிலகாவலரண்கள் அழிக்கப்பட்டன. பல இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். பலர் படுகாயம் அடைந்தனர். புலிகள் தரப்பில் இருபத்தொரு போராளிகள் வீரமரணம் அடைந்தனர்.

கட்டைக்காடு-வெற்றிலைக்கேணிப் பகுதியில் தரையிறங்கி ஆனையிறவு சென்றுள்ள இராணுவத்தின் விநியோகப் பாதையைப் பாதுகாப்பதற்காக அமைக்கப்பட்டிருந்த புல்லாவெளிக் காவல் அரண்கள் மீது விடுதலைப்புலிகள் நேற்று அதிகாலை 4.45 மணிக்கு திடீர் தாக்குதல் ஒன்றைத் தொடுத்தனர். இத்தாக்குத

(4ஆம் பக்கம் பார்க்க)

## 2 கவச வாகனங்கள் சேதம்; பல படை பலி; பலர் படுகாயம்

(இயக்கச்சி)

ஆனையிறவு முகாம்பகுதியில் நேற்று கடும் மோதல்கள் இடம்பெற்றுவருவதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

கட்டைக்காடு-வெற்றிலைக்கேணிப் பகுதியில் தரையிறங்கிய இராணுவத்தினர் ஆனையிறவு முகாமிற்குள் சென்ற பின்னர் ஆனையிறவு முகாம் சூழவுள்ள பகுதியில் கடும் மோதல்கள் இடம்பெற்ற வண்ணமுள்ளன. இம்மோதல்கள் இரண்டாவது நாளாக நேற்று முன்தினமும் இடம்பெற்றன.

நேற்று முன்தினம் காலையில் மூண்ட மோதலின் போது கவசவாகனங்களின் உதவியுடன் முன்னேற முயன்ற பல இராணுவத்தினர் கொல்லப்பட்டனர் பலர் படுகாயம்

(4ஆம் பக்கம் பார்க்க)

## பெரும் உயிர், நிதி, செலவில் தக்கவைத்த ஆனையிறவு முகாம்

(லண்டன்)

பெரும் உயிர் மற்றும் நிதிச் செலவுகளினாலேயே ஆனையிறவு முகாமை சிறிலங்கா இராணுவத்தால் தக்க வைத்துக்கொள்ள முடிந்தது என பி. பி ஸி. தனது ஆய்வுரையில் நேற்றிரவு தெரிவித்தது.

அதில் மேலும் ஒன்பது கிலோ மீற்றர் தூரத்தைக் கடக்க இலங்கைப் படையினருக்கு இருபத்தொரு நாட்கள் தேவைப்பட்டன என்றும் இந்த ஆனையிறவுப் போரில் தான் இத்தனை பெரிய எதிர்ப்பை சிறிலங்கா இராணுவம் முதன்முறையாக சந்திக்க நேர்ந்தது என்றும் தெரிவிக்கப்பட்டது,

அத்துடன், ஆனையிறவுப் போர் முடிவு என்பது உள்நாட்டுப் போருக்கு முடிவு அல்ல என்றும், இப்போரில் இலங்கை அரசுக்கு இராணுவம் மற்றும் நிதித்துறை விடயத்தில் எக்கச்சக்கமான செலவு அழிவு அதாவது சோளப் பொரியால் யானையைப் பிடிக்காமல் - புலியை வெல்லாமல் பெருந்தொகையானஉயிர் மற்றும் நிதிச் செலவால் பிடித்திருப்பது தெளிவாகத் தெரிகிறது என்றும் குறிப்பிட்டது.

### யூலை 16 முதல் 30 வரையான காலப்பகுதியில்

## ஆனையிறவு, கட்டைக்காட்டில் வீரமரணமடைந்தோர் விபரம்

(யாழ்ப்பாணம்)

ஆனையிறவு, கட்டைக்காடு வெற்றிலைக்கேணிப் பகுதியில் கடந்த பதினாறாம் திகதியில் இருந்து முப்பதாம் திகதி வரை நடைபெற்ற மோதலில் வீரமரணமடைந்த விடுதலைப் புலிகளின் விபரம் வருமாறு:

★ குமரப்பா (பாலசுப்பிரமணியம் சிவபாலன் தெல்லிப்பளை, பன்னாலை)

★ சுகந்தன் (பூபாலசிங்கம் பூலோகச்சந்திரன், சபாபதிப்பிள்ளை வீதி) ஆச்சிரமத்தடி சுன்னாகம)

★ ஸ்ரீரங்கன் (யோகதாஸ் நேசராசா துன்னாலை வடக்கு துன்னாலை)

★ மௌலி (தாமோதரம்பிள்ளை மணிவாசன் கொக்குவில் கிழக்கு கொக்குவில்)

★ புஷ்பன் (நாகராசா புலேந்திரன் நாவற்குழி தெற்கு, கைதடி)

★ விநோத் (மோகனதாஸ் சுரேஷ்நிரஞ்சன், கேணிப் புலம் ஒழுங்கை மயிலிட்டி)

(3ஆம் பக்கம் பார்க்க)

## கோண்டாவிலில் மக்கள் மாவீரர்களுக்கு அஞ்சலி

(ஈச்சமோட்டை)

ஆனையிறவில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நேரடி மோதலில் வீரமரணமடைந்த போராளிகளின் புகழுடல்கள் நேற்று பிற்பகல் 3-45 மணியளவில் கோண்டாவில் இந்து மகாவித்தியாலயத்தில் விசேடமாக அமைக்கப்பட்ட மேடையில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டன.

தர்மிளா (கௌரி கனகு - உரும்பராய்), கௌவுந்தளா (மேரி எமல்டா - பண்டத்தரிப்பு), கவிதா (கென்சியா

(4ஆம் பக்கம் பார்க்க)

## புலிகள் எதிர்க்கவில்லை; அவசரத்தில் வந்த செய்தி

(லண்டன்)

ஆனையிறவுப் பகுதியில் தொடர்ந்தும் கடும் மோதல்கள் நடைபெற்று வருவதாக இராணுவத் தரப்பு செய்திகளை மேற்கோள் காட்டி பி. பி ஸி நேற்றிரவு கூறியது. பி பி. ஸி நேற்றிரவு தனது செய்தி விமர்சனத்தில்மேலும் புலிப்படையினர் முன்பு அதிகம் எதிர்ப்புக் காட்டவில்லை என வந்த செய்திகள் அவசரப்பட்டு வெளியிட்டது போல் தெரிகிறது. நேற்று ஆனையிறவைச் சுற்றி நேரடிக் கைகலப்பு மோதல்கள் இடம் பெற்றுள்ளன எனவும் தெரிவித்தது.

## தஞ்சையில் கட்சி மோதல்; 30 வீடுகள் தீக்கிரை

(சென்னை)

தஞ்சை மாவட்டத்தில் அ. தி. மு. க தொண்டர்களுக்கும் மாக்சிய கம்யூனிஸ் கட்சிதொண்டர்களுக்கும் இடையே ஏற்பட்ட மோதலில் ஒருவர் உயிரிழந்ததாகவும் 30 வீடுகள்தீக்கிரையாக்கப்பட்டன என்றும் தெரிவிக்கப்படுகிறது

கடந்த சனிக்கிழமை ஏற்பட்ட இந்த மோதல் சம்பந்தமாக 30 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று காவல் துறையினர் தெரிவித்தனர்.

## எழுச்சி ஊர்வலங்கள்

(உரும்பராய்)

உரும்பராய், ஊரெழு போன்ற பகுதிகளில் போர்க்காலத் தெருக்கூத்தும் எழுச்சி ஊர்வலம் ஒன்றும் நடைபெற்றுள்ளது.

நேற்று முன்தினம் இரவு நடைபெற்ற இத்தெருக்கூத்து நிகழ்ச்சியிலும், எழுச்சி ஊர்வலத்திலும் நூற்றுக்கணக்கான மக்கள் கலந்து கொண்டனர் இத்தெருக்கூத்து ஏனையபகுதிகளிலும் நடாத்துவதற்குத் திட்டமிடப்பட்டிருக்கின்றது. (க)

## வீரவணக்கம்

### 2 ஆவது லெப். சுந்தரேஸ்வரன்

(யாழ்ப்பாணம்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த சனிக்கிழமை இரவு சுகவீனம் காரணமாக 2 ஆவது லெப். சுந்தரேஸ்வரன் (கணபதிப்பிள்ளை சந்திரன், முதலாம் வட்டாரம், முனைக்காடு, மட்டக்களப்பு என்ற போராளி இயற்கை மரணமாகியுள்ளார். இவருக்கு விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

## தொலைபேசி ஒற்றுக்கேட்பு

(சென்னை)

முன்னாள் முதலமைச்சர் மு. கருணாநிதியின் தொலைபேசி உரையாடலை ஒற்றுக்கேட்டதாக சென்னையில் நேற்றுத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இக் குற்றச் சாட்டை நேற்றுச் சென்னையில் தி. மு. க தெரிவித்தது.

## போர்க்கால திருப்பள்ளி எழுச்சி

(நல்லூர்)

தேனீக்கள் வழங்கும் போர்க்கால திருப்பள்ளி எழுச்சி நேற்று இரவு வீதிகளில் பாடப்பட்டது. வாத்தியங்களும், சேமக்கலமும் ஒலிக்க எழுச்சிப் பாடல்கள் பாடப்பட்டன.

நல்லூர்ப் பகுதியில் முக்கிய சந்திகளில் தீவர்த்தி வெளிச்சத்தில் போர்க்கால திருப்பள்ளி எழுச்சி நிகழ்ச்சி இடம் பெற்றது.

## மக்கள் வங்கி இடம்மாற்றம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை மக்கள் வங்கியின் தென்மராட்சிக்கிளை மூடப்பட்டது. இந்த வங்கி இப்பொழுது யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதி மக்கள் வங்கிக் கிளைக்கு மாற்றப்பட்டுள்ளதாகயாழ். மாவட்ட மக்கள் வங்கியின் தலைமைக் காரியாலயத்தில் தெரிவிக்கப்பட்டது.

(4ஆம் பக்கம் பார்க்க)

## ஆந்திரா அமைச்சரவையில் நரசிம்மராவின் மகன்

(சென்னை)

ஆந்திரப் பிரதேசத்தில் ஜனார்த்தன் ரெட்டி அமைச்சரவையில் புதிதாக 19 அமைச்சர்கள் சேர்க்கப்பட்டதை அடுத்து அமைச்சரவை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

பிரதம மந்திரி பி. வி. நரசிம்மராவின் புதல்வர் ரங்கையாவும் ஒரு இணை அமைச்சராக அமைச்சரவையில் சேர்க்கப்பட்டிருக்கிறார்.

**University of Jaffna**

**Repeat examination-**
**Certificate Course**
**in DataProcessingand**
**BASIC Language**
**Programming**

The above examination will be conducted in November1991. The eligible repeat candidates are requested to complete and submit the examination entry forms to the Examination branch, University of Jaffna, before 15th September 1991

Those who are applying for the DPBL 22 paper (Project Work) are requested to meet the Head/Computer Unit on or before 31st August 1991 to discuss about the arrangements for Project Work. The exact dates of the examination will be notified later.

**Registrar,**
**University of Jaffna.**

(B-2910)

---

# ஓராண்டு அஞ்சலியும் திதியும்

## வீரவேங்கை காண்டீபன்

தாவடி
(அப்பையா பாலகிருஷ்ணன்)

ஈழமண்ணில் **12-10-1972** | வீரவிண்ணில் **1-08.1990**

மண்மீட்க வேங்கையெனப்
புறப்பட்டாய்
''திண்ணமே ஈழத்தமிழகம்
காண்ப'' தெனச் சூளுரைத்தாய்
கண்ணா நீ! விண்ணுலகம் ஏகினாலும்
கண்ணீர் விட்டுக் கலங்காது
எண்ணத்தில் நிறைத்துன்னை
ஏற்றுகிறோம்.

ஐந்து வேம்படி
தாவடி கொக்குவில்

அப்பா, அம்மா, சகோதரர்
அத்தான், சுற்றத்தார்
நண்பர்கள்,

(R/1615)

---

# மரண அறிவித்தல்

## Dr. C. K. துரைரத்தினம்

**(Retired Deputy Superintendent, Civil Medical Stores)**

மயிலிட்டியைப் பிறப்பிடமாகக் கொண்ட Dr. C.K. துரைரத்தினம், கொழும்பில் 4-8-91 அன்றுகாலமானார்,

இவர் மங்களேஸ்வரியின் அன்புக் கணவரும், பிறேம் குமார் (U K.), ஜெயகுமார் (Australia), ராஜ்குமார் உதயகுமார் ஆகியோரின் அன்புத்தகப்பனும், சிவலிங்கம் (மந்திகை வைத்தியசாலை), வசந்தி, ரூபமூர்த்தி யாழ், பல்கலைக்கழகம்) ஆகியோரின் தமையனுமாவர்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 6-8-91 (இன்று) C$\frac{3}{8}$ அண்டேசன் மாடியில் நடைபெற்று தகனக்கிரியைகளுக்காக கனத்தை மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
**க. பாலசுப்பிரமணியம்**
[Dean Faculty of Medicine]

(R-1617)

---

**வரிஸ்ஸம்பரம்**

**அனித்தா பயிற்சி நிலையம்**
**மனையியல் கண்காட்சி**

இம்மாதம் 9,10 11 ஆம் திகதிகளில் நடைபெறும். Cakeicing, Cookery, Hair Style, Handi Craft, Needle Work.

(B/2900)

---

**மலிவு விற்பனை**

A/L, O/L, ஆண்டு 5 (புலமைப்பரிசில்) பரீட்சைகளுக்கான Tutes மலிவு விலையில் விற்பனையாகின்றன. Bond புத்தக நிலையம் 58 A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்

(B/2891)

---

# நினைவு கூருகின்றோம்...

**1991-08-06**



2ஆம் லெப்.
பாருதி/கண்ணன்

1984ஆம் ஆண்டு இதே தினத்தில் வவுனியாவில் சிறிலங்காப்படையினரால்
சுட்டுக் கொல்லப்பட்ட உணவக ஊழியர்களான 4 தமிழர்கள்

1987ஆம் ஆண்டு திருக்கோணமலைச் சந்தியில் தமிழீழத் தேசியக் கொடியான
புலிக்கொடி ஏற்றும் போது சிறிலங்கா ஊர்காவற்படையினரால்
சுட்டுக் கொல்லப்பட்ட எமது ஆதரவாளர்

**ஆறுமுகநாதன்**

1988ஆம் ஆண்டு வீரமரணமெய்திய

**2ஆம்லெப். விக்ரர்** (ஞானராசா விக்ரோறியன்நேசராசா - கிளிநொச்சி)

1989ஆம் ஆண்டு கிளிநொச்சி, 7ஆம் வாய்க்கால் பகுதியில் இந்தியப்படையினர்
பதுங்கியிருந்து தாக்கியதில் வீரமரணமெய்திய

**வினோதன்** (செபஸ்தியாம்பிள்ளை சிறீயோகராசா - கனகபுரம், கிளிநொச்சி)

1990ஆம் ஆண்டு ஆனையிறவு பகுதியில் சிறிலங்காப்படையினருடனான
நேரடி மோதலில் வீரமரணமெய்திய

**பரணி** (மீசாலை)

யாழ். கோட்டைப் பகுதியில் சிறிலங்காப்படையினரின்
விமானத்தாக்குதலில் வீரமரணமெய்திய

**2ஆம்லெப். பாருதி கண்ணன்** (விஷ்ணுகாந்தி கருணாகரன்-மீசாலை தெற்கு)
**சித்திரன்** (பரமானந்தம் ஜீவானந்தன் - சந்தை மேற்கு வீதி, பருத்தித்துறை)
**பயஸ்**

பெரியகல்லாறுப் பகுதியில் சிறிலங்காப்படையினரால் சுட்டுக்
கொல்லப்பட்ட 29 தமிழ் இளைஞர்கள்

மட்டக்களப்பு, சந்திவெளித்துறைப் பகுதியில் சிறிலங்காப்படையினரால்
சுட்டுக்கொல்லப்பட்ட தமிழ் இளைஞன்

முறக்கொட்டாஞ்சேனை முகாமிலிருந்து சிறிலங்காப்படையினர் புலிபாய்ந்தகல்
பகுதியை நோக்கி மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலில்
கொல்லப்பட்ட தமிழ்ப் பொதுமகன்

திருக்கோணமலை, பாலையூற்றுப் பகுதியில் சிறிலங்காப்படையினரால்
கைது செய்யப்பட்டு காணாமற் போன 6 தமிழர்கள்

சிலாவத்தைப் பகுதியில் சிறிலங்காப்படையினர் மேற்கொண்ட விமானத்
தாக்குதலில் கொல்லப்பட்ட ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 3 தமிழர்கள்

பலாலி முகாமிலிருந்து சிறிலங்காப்படையினர் ஏவிய எறிகணை தெல்லிப்பளை
துர்க்கை அம்மன் ஆலய அகதி முகாம் மீது வீழ்ந்து வெடித்ததில்
கொல்லப்பட்ட ஒரு பெண் உட்பட 2 தமிழர்கள்

கொக்குவில் புகையிரத நிலையத்தை அண்மித்த பகுதியில் சிறிலங்காப்படையினர்
மேற்கொண்ட விமானத் தாக்குதலில் கொல்லப்பட்ட 2 தமிழர்கள்

யாழ். வளாக வீதியில் சிறிலங்காப் படையினரின் உலங்கு வானூர்தி
மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்ட தமிழ்ப்பொது மகன்

மீசாலையில் சிறிலங்காப்படையினரின் உலங்கு வானூர்தி மேற்கொண்ட
துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்ட தமிழ் இளைஞன்


**ஆகியோரை இந்நாளில் நினைவு**
**கூருகின்றோம்.**

**விடுதலைப் புலிகள்**
**- மக்கள் முன்னணி**

(B-2898)

---

# 3-ம் ஆண்டு நினைவஞ்சலி



வயவையில் மழலையாய்
**18.07.1967**

வன்னியில் வரலாறாய்
**06.08.1988**

## லெப்டினனட் - விக்ரர்

**(ஞானராசா - விக்ரோறியன் நேசராசா)**

மானத்தின் விளைநிலமாம் ''வயவையிலே'' பிறந்தவனே
மங்காத தமிழ்ஈழ மகிமைக்காய் முல்லையிலே
சரித்திரமானவனே
கயமையழிக்கவென நாடு காக்கவென
தன்னுயிர் தந்த வீரனே ''விக்ரர்''
வானத்து வெண்ணிலவாய் வான் வழியாய் சென்றவனே
வாயடைத்து விம்முகிறோம் வந்தொருகாற் பேசாயோ

எங்கள் மண் தன்னுரிமையிழப்பதா
அதை இன்னொருவர் ஆளவிடுவதா
பொங்குக தமிழுணர்ச்சியென அறைகூவிய வீரனே
கானத்து வேங்கையென களம் புகுந்த நேசனே
''காந்தி'' படையினரை கதிகலங்கச் செய்தவனே
நானிலத்தில் தமிழீழம் (நாளை) நனவாகப்
போகுதடா
நாற்றிசையும் உனது புகழ் நறுமணமாய் வீசுமடா
மூன்றாண்டு நினைவலையில் முத்தாக மிளிர்பவனே
மூச்சிலும் பேச்சினிலும் முனைப்பாக வந்திடடா
எங்கள் குடும்பத்தின் இணையிலாச் செல்வமே
உன் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

உன் பிரிவால் துயருறும்
அப்பா, அம்மா, அக்கா அண்ணன்,
தங்கைமார் உறவினர் நண்பர்கள்

''விக்ரர் வீதி''
திருநகர்
கிளிநொச்சி

(B/2909)

### சிந்தனைக்கு

கடந்த காலத்தை நினைவிற் கொள்ளாதவர், அதை மீண்டும் அனுபவிக்கும் தண்டனைக்கு ஆளாவர்.

- ஜார்ஜ் ஸாந்தாயனா

ஈழநாதம்

31, மகேந்திராவீதி, யாழ்ப்பாணம், 06-08-1991
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 5208
த. பெ. எண் 05

# பேரினவாதிகள் கலக்கமுறும் இழப்பு

ஆனையிறவு இராணுவ முகாம் மீதான புலிகளின் முற்றுகை உடைக்கப்பட்டது. ஆயிரக் கணக்கில் புலிகள் கொல்லப்பட்டனர். சிறிலங்கா முப்படைகளும் வெற்றிமேல் வெற்றியைக் குவித்து வருகின்றன என சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவிப்பதாக சிறிலங்கா வானொலியும், தொலைக்காட்சியும் வெற்றிமுரசு கொட்டிய வண்ணமுள்ளன. இவற்றைவிட மேலாக இந்திய வானொலியும், தூரதர்ஷனும் விடுதலைப் புலிகளே அழிந்துவிட்டார்கள் இனி அவர்களுக்கு மீட்சியே இல்லை என சிறிலங்கா வானொலி, தொலைக்காட்சிக்கு மேலாக சிறிலங்கா இராணுவத்தின் புகழ் பாடுகின்றது.

தான் தோற்றுப்போனாலும் பரவாயில்லை. இலங்கைத் தமிழர் அழிந்தால் போதும் என்பது இந்தியத் தரப்பின் இன்றைய நிலைப்பாடு. அதனால் யாராக இருந்தாலும் இலங்கைத் தமிழரை அழிப்பவருக்கு என் ஆதரவு உண்டு என்பது இன்றைய இந்தியாவின் கொள்கை. பாவம் பிராந்திய வல்லரசு அன்றும் - 1987 - இல் தனது தப்புக்கணக்கில் இலங்கைத் தமிழரிடம் தோற்றது.

ஆனால், இந்திய அரசின் பரிதாபகரமான நிலையில் சிறிலங்கா அரசு இல்லை. ஆனையிறவு முற்றுகை உடைப்பிற்காக சிறிலங்கா இராணுவத்திற்கு ஏற்பட்ட இழப்புக்களையும், சிறிலங்காவிற்கு ஏற்பட்ட பொருளாதார இழப்புக்களையும் சிறிலங்கா ஆட்சித் தலைவர்களும், இராணுவமும் நன்கு அறியும். இப்போரினால் அரசியல் பரிமாணத்தில் ஏற்பட்ட மாற்றமும் சிறிலங்கா அரசிற்குத் தெரியும்.

1983 ஆம் ஆண்டு ஆயுதப் போராட்டம் கூர்மை அடைந்ததில் இருந்து விடுதலைப் போராட்டம் வளர்ந்தே வந்துள்ளது. விடுதலைப் புலிகள் இராணுவ ரீதியாக முடக்கப்பட்டு விட்டார்கள், தோற்கடிக்கப்பட்டு விட்டார்கள் என ஒவ்வொரு முறை அறிவிக்கப்பட்ட போதும் புலிகள் அதை உடைத்தெறிந்தார்கள். இந்த அறிவித்தல்களின் பின் புலிகள் தமது பலத்தை வெளிப்படுத்தும் போது முன்னரை விட தமது பலம் எந்தளவிற்கு வளர்ந்துள்ளது என்பதை சிறிலங்காவிற்குக் காட்டியுள்ளார்கள்.

இதன் வெளிப்பாடே இதுவரை இராணுவ மேலாதிக்கத்தைப் பற்றிப் பேசி வந்த சிறிலங்கா ஜனாதிபதி ஆனையிறவு முற்றாக முறியடிக்கப்பட்டதாயினும் இராணுவவெற்றி பற்றிப் பேசவில்லை. "யுத்தத்தில் எவரும் வெற்றி பெறுவதில்லை" என்றுகுறிப்பிட்டார். ஆனையிறவுப் போரின் கடுமையையும், அதன் அரசியற் பரிணாமத்தையும் அவர் உணர்ந்துள்ளார். முன்னாள் சிறிலங்கா ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனாவின் பேரினவாதச் சிந்தனைக்குக் குறைந்தவரல்லர் இன்றைய ஜனாதிபதி பிரேமதாசா. இன்றுவரை ஆனையிறவுப் போரின் தாக்கம் அவ்வாறு பேச முடியாமல் செய்துவிட்டது. அவரை போருக்கு அறைகூவல் விடுக்க முடியாமல் அடக்கி விட்டது.

இதேபோன்றுஇராணுவமேலாதிக்கத்தையே தொடர்ந்து பேசி வந்த சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சிறில்ரணதுங்காவும் வெற்றி பெற்றோம். ஆயினும் போரில் ஏற்பட்ட உயிரிழப்புக்கள் பற்றி நாம் சிந்திக்க வேண்டும் இந்த உயிர் இழப்புக்களினால் "நாட்டிற்குப்" பெரும் சேதங்கள் ஏற்பட்டுள்ளன என்றார், இதுவரை போரில் தமது தரப்பில் ஏற்படும் உயிரிழப்புக்கள், சேதங்கள் பற்றிப் பேசாத சிறிலங்கா அரசு தரப்பினர் தற்பொழுது பெரும் கிலேசம் அடைந்துள்ளனர்

1977ஆம் ஆண்டு தமிழ்த்தலைவர்களுக்கு, போர் என்றால் போர் சமாதானம் என்றால் சமாதானம் என போருக்கு அறைகூவல் விடுத்த பேரினவாதிகள், ஆனையிறவுப் போர் வரை இராணுவ மேலாதிக்கத்தைப் பற்றியே பேசிவந்தனர். ஆனால், ஆனையிறவு முற்றுகை முறியடிக்கப்பட்டபோது இழப்புக்களையும், சமாதானத்தையும் பற்றிப் பேசுகின்றார்கள். அவ்வாறாயின் இப்போரில் வென்றவர் யார்? தோற்றவர் யார்? பேரினவாதிகள் வெற்றியின் போது இழப்புக்கள் பற்றி எப்பொழுதும் பேசுவதில்லை.

# தங்கப் பாளம் கடத்திய சிறிலங்கா இராணுவ அதிகாரி

(கொழும்பு)

சிங்கப்பூரிலிருந்து தங்கப் பாளங்களைக் கடத்தி வந்த இலங்கை இராணுவ அதிகாரி ஒருவர் சுங்க அதிகாரியிடம் சிக்கினார்.

சிங்கப்பூரிலிருந்து 80 லட்சம் ரூபாபெறுமதியான 80 தங்கப் பாளங்களையும் 3000 தங்க முலாம் பூசிய கைக்கடிகாரங்களையும் இலங்கைக்குக் கடத்தி வந்ததாக இலங்கை இராணுவ லெப்டினன்ட் ஒருவர் கடந்த வெள்ளியன்று கட்டுநாயக்கா விமான நிலையத்தில் சுங்க அதிகாரிகளிடம் சிக்கினார்.

மூன்று உடுப்புப் பெட்டிகளில் போலி அடிப்பாகத்தினுள் தங்கப் பாளங்கள் மறைத்துக்கொண்டு வரப்பட்டதை சுங்க உதவி அத்தியட்சகர் திரு. அனுர குணதிலகா சோதனையின் போது கண்டு பிடித்தார். இவர் தற்போது சுங்க அதிகாரிகளின் விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளார்.

## வெற்றிவேண்டி பிரார்த்தனை

ஆனையிறவில் போரிடும் போராளிகளுக்கு ஆன்ம பலம் வேண்டியும், காயமடைந்த போராளிகள் உடல் நலம் பெற வேண்டியும், வீரமரணமடைந்த போராளிகளின் ஆத்மாசாந்தி பெறவும்வேண்டியும்.

யாழ். கந்தர்மடம், ரயில்வே கடவையருகில் எழுந்தருளியிருக்கும் ஞானவைரவசுவாமிக்கும், அன்னை நாகபூசணிக்கும் விசேட அபிஷேகமும், காவல் வேண்டி எட்டுத்திக்கும் பொங்கலும், தீக்குளிப்பும், பிரார்த்தனையும் இன்று (6-8-91) செவ்வாய்க்கிழமை பிற்பகல் நடைபெறும்.

இதே நேரம் யாழ். வண்ணை பன்றிக் கோட்டுப் பிள்ளையார் கோயிலில் கடந்த வெள்ளிக்கிழமையன்று ஆனையிறவுப் போரில் போராளிகளுக்கு ஆன்மபலம் வேண்டியும், காயமுற்ற போராளிகளுக்கு நல்ல சுகம் வேண்டியும், வீரமரணமடைந்த போராளிகள் ஆன்மா சாந்தி பெறவும் விநாயகப் பெருமானுக்கு விஷேட அபிஷேக ஆராதனை பொங்கல், பூசை, பிரார்த்தனை ஆகியனநடைபெற்றது.

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

- ★ சிவசங்கர் (யோசப் ஜெயமணி கோதண்டர் நொச்சிகுளம், வவுனியா)
- ★ விசயன் (வேலுப்பிள்ளை மாரிமுத்து சீனிவாசகம் வீதி, கொட்டடி)
- ★ நகுலேஸ்வரன் (சிங்காரவடிவேல்தவக்குமார், நெற்காடு ஒழுங்கை, ஊரிக்காடு, வல்வெட்டித்துறை)
- ★ கைலன் (அரியரட்ணம் குசந்தன், சிவமயம் வட்டு மேற்கு, வட்டுக்கோட்டை)
- ★ நிசாந்தன் (அருளானந்தம் யூட் அன்ரனி 8ஆம்வட்டாரம் நெடுந்தீவுமத்தி, நெடுந்தீவு)
- ★ மணிவாசன் (கணேசநாதன் ஜனார்த்தனன் கௌரிவாசம், 68, காரைக்கால் வீதி, இணுவில்)
- ★ இக்பால் (நாகலிங்கம் கிருஷ்ணகுமார் காந்திநகர் திருக்கோணமலை)
- ★ ராஜபாரதி (நாகலிங்கம் ஸ்ரீதவானந்தன்மகிழவெட்டுவான் வீதி, ஆயித்தியமலை செங்கலடி)
- ★ காண்டி (கனகரத்தினம் கனகேஸ்வரன் 688, நொத்தம்பியாகுளம், துணுக்காய்)
- ★ ஆனந்தன் (நேசா அமலதாஸ் 26, றக்கா வீதி, சுண்டுக்குளி)
- ★ ஜேம்சன் (சாத்தையா ராமு இந்துபுரம் முறிகண்டி)
- ★ சுரேஷ் (சுப்பிரமணியம் சிவகுமார் சித்தங்கேணி, வட்டு. கிழக்கு)
- ★ ராவ் (சின்னையா மோகேஸ்வரன் பாரதிபுரம், எருவில் களுவாஞ்சிக்குடி)
- ★ அஜந்தன் (அல்போன்ஸ் சேகர் மலர்இல்லம் மெமோறியல் லேன், மானிப்பாய்)
- ★ பப்பா (செல்வம் கணேஷ் 12/12, கண்ணாதிட்டி வீதி யாழ்ப்பாணம்)
- ★ சதீஷ் (தம்பையா யோகநாதன் நாவற்காடு வரணி)
- ★ பாண்டியன் (துரைசிங்கம் கிருஷ்ணகுமார்-சங்கானை மேற்கு, வடலியடைப்பு, பண்டத்தரிப்பு)
- ★ அறிவொளி (ஸ்ரீ பத்மநாதன் சத்தியசீலன் - 25, விதானையார் வீதி, சுண்டுக்குளி)
- ★ இளஞ்செழியன்(யோகேஸ்வரன் அரவிந்தன்-மயிலியதனை மேற்கு, வல்வெட்டி)
- ★ பட்சன் (சீனியர் உதயராசா – மத்தலோடை புன்னாலைக்கட்டுவன்தெற்கு)
- ★ சிவா (இராசப்பு அன்ரனி அமலநேசன் - கோபாலபுரம், நிலாவெளி, திருமலை)
- ★ டயஸ் (நாகமுத்து ஸ்ரீசங்கர் - மோகன் வீதி, அச்செழு, நீர்வேலி)
- ★ சுருளி(சிவகுரு அப்பன்-மயிலிட்டி தெற்கு, மயிலிட்டி)
- ★ வினித்தா (தியாகராசா இலங்கேஸ்வரி - புலோலி தெற்கு, புலோலி)
- ★ விக்கி (சின்னையா ராமஜெயம் ஆண்டான் குளம் மட்டக்களப்பு).
- ★ அஜந்தன் (வேலு ஆனந்தன் நித்தியடிபாண்டியன்குளம் துணுக்காய்).
- ★ நரேஸ் (ஆரோக்கியநாதர் எட்வேட் குணசூரியர் சில்லாலை தெற்கு பண்டத்தரிப்பு).
- ★ சந்திரன்(முருகேசுராஜேஸ்கண்ணன், கல்லடி 85, அரசாங்கவிடுதி ஒழுங்கை, மட்டு).
- ★ தாஸ் (செல்லப்பா குகேந்திரன் 141, உருத்திரபுரம் கிளிநொச்சி).
- ★ முரளி (எட்வின் சிறீ மருதங்குளம்மாங்கேணிமட்டு)
- ★ சிசில் (ராமையா பொன்னம்பலம் (ராஜேந்திரன்) முழங்காவில் பள்ளிக்குடா முழங்காவில்)
- ★ சிகாணு (கதிரவேல் கருணேஸ்வரன், சிவன்ஸ்ரோர் முழங்காவில் பூநகரி).
- ★ மணாளன்(பியதாஸ் விஜயபால் பாரதிபுரம் திருமலை).
- ★ ஆதவன் (சிவலிங்கம் சிவானந்தம் பூநகர் திருமலை (மூதூர்)
- ★ ஜெயா (யேசுதாஸ் கொணறியூட் சிறீநீலாசோலை உயிலங்குளம்).
- ★ துரை (சிங்கராஜா மனோகர் கள்ளிமேடு தம்பலகாமம்)
- ★ தமிழ்செல்வன் (மாசிலாமணி நிறஞ்சன் திருமலை)
- ★ காமன்(கனகலிங்கம்சுதேஸ்வரன் பாரதிபுரம் திருமலை).
- ★ சசி (மாணிக்கராசா சிவகுமார் 6ஆம் கட்டை விளாங்குளம், கண்டி வீதி திருமலை)
- ★ சதீஸ் (கபுஸ்பராஜன் ஆலங்கேணி கிண்ணியா.)
- ★ லிங்கேஸ் (வன்னியசிங்கி ஜவன்ஜெயராஜ் 847, செல்வநாயகபுரம் உப்புவெளி)
- ★ காந்தருபன்(பிரான்சிஸ் நெல்சன் 310, N. C. றோட் திருமலை).
- ★ சுலோஜன் (சிற்சபை நிறஞ்சன் நாயன்மார் திடல் தம்பலகாமம்).
- ★ கோபி( கந்தையாபேரின்பமூர்த்தி 6ஆம் வட்டாரம் வேலணை மேற்கு வேலணை).
- ★ வண்டு (சுப்பிரமணியம் யோகேஸ்வரன் உடுத்துறை தாளையடி)
- ★ யோகன் (சின்னத்துரை கண்ணன் பட்சத்தை சுழிபுரம் கிழக்கு, சுழிபுரம்.)
- ★ தவச்செல்வி (ராமநாதன் சித்திராஞ்சலி, தெமிபேர். மிருசுவில், சாவகச்சேரி)
- ★ நந்தன்(சின்னத்துரை ஜீவானந்தன், மட்டுவில், சாவகச்சேரி)
- ★ தேவா (சந்திரமோகன், வாகரை, மட்டக்களப்பு)
- ★ சேரன் (சண்முகம் றோய் செழியன், றாகம, பண்டாரவளை)
- ★ பிறேம்நாத் (சீனிவாசகம் கௌரிநாதன், மெயின்வீதி திருக்கோயில்)
- ★ எழில் (சந்திரசேகரம் சசிதரன், மயிலங்கூடல், இளவாலை)
- ★ இந்திரன் சண்முகம் பாகரன், வைரவர் கோயிலடி, வீரம்கோரிறோட், கிரான், மட்டக்களப்பு)
- ★ திலக்(சேதுலிங்கம்கிருஷ்ணவரதன், ஆதிகோயிலடி, வல்வெட்டித்துறை)
- ★ ரமணி (சின்னத்துரை ரமணன், 234/10, செபஸ்தியார் றோட், ஓட்டுமடம்)
- ★ முரளி (மகாலிங்கம் தவக்குமார், 5 ஆம் வட்டாரம், நெடுந்தீவு மேற்கு)
- ★ இருதயராஜ் (நிக்லஸ் லோறன்ஸ், 6ஆம் கொலனி சொறிக்கல்முனை, அம்பாறை)
- ★ அகிலன் (வேலுப்பிள்ளை கந்தசாமி, கோயில் புளியங்குளம், நெடுங்கேணி)
- ★ மணிவண்ணன் மேரியோசப் பிரான்ஸிஸ் சேவியர், அரிப்புமுருங்கன், மன்னார்)
- ★ செந்தூரன் கந்தையா நாகேந்திரன் 31A, 11 ஆம் கலனி சென்றல் முகாம், அம்பாறை)
- ★ விநாயகன் (சித்திரவேல் மோகன் உ.பதபாற் கந்தோர் வீதி, கோவில்போரதீவு, மட்டு)
- ★ குருபரன் (ஆறுமுகம் பாலையா எட்டியாந்தோட்டை, (காரைநகர்)
- ★ அகிலன் (வேலன் மோகன சிறி கைதடி மேற்கு, உதயநகர், கைதடி
- ★ ஜெயராமன் (சந்திரசேகரம் உதயகுமார் கைதடி கிழக்கு, கைதடி)
- ★ செபமாலை (அலெக்சான்ந்றூபன் 3 ஆம் வட்டாரம், பேசாலை, மன்னார்)
- ★ சோழன் (மாணிக்கராசா சிறிசங்கர் ஈச்சன் தீவு, ஆலங்கேணி, கிண்ணியா)
- ★ நரேஷ் (சபாரட்ணம் சிவபாதம் கரவெட்டி மேற்கு, கரவெட்டி)
- ★ சுதன் (இராசரட்ணம் ஜீவகுமார் இரணை இலும்பங்குளம் வீதி, பூவரசங்குளம்)
- ★ உபாலி(இராசதுரை பிரபாகரன் 2 ஆம் கண்டல், முத்தையன்கட்டு)
- ★ கணேஷ் (வைத்திலிங்கம் துரைவடிவேல் அல்லை வீதி, கெருடாவில் தொண்டைமானாறு)
- ★ கணன் (நாகமுத்து கலியுகவரதன் உடுத்துறை, தாளையடி)
- ★ அலெக்ஸ் (பூபாலசிங்கம் பவளகாந்தன் கச்சாய் வெளி, பளை)
- ★ அன்பு (யாக்கோப் அல்வின் கோட் உயரப்புலம், ஆனைக்கோட்டை)
- ★ காஸ்றோ (நடேசபிள்ளை சுதாகரன் 162 ம் கட்டை, கண்டி வீதி, பரந்தன்)
- ★ அசோக் (கதிர்காமநாதன் இரகுநாதன் சங்கத்தார் வயல், இயக்கச்சி)

(4ஆம் பக்கம் பார்க்க)

# சட்ட நிறைவேற்றத்தில் இ. காங்கிரஸ் திண்டாட்டம்

(டில்லி)

குற்றத் தடுப்பு நடவடிக்கைத் திருத்தச் சட்டத்தை நிறைவேற்ற முடியாமல் இந்தியா ஆளும் கட்சியினர் நேற்று ராஜ்ய சபையில் திண்டாடினர். இ. காங்கிரஸ் உறுப்பினர் எஸ். எஸ். அலுவாலியாவினால் கொண்டு வரப்பட்ட மேற்படி மசோதாவுக்கு 39 பேர் சாதகமாகவும், 39 பேர் பாதகமாகவும் வாக்களித்தனர்

மாக்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த உப-சபாநாயகர் எம். ஏ. பேபி தனது வாக்கை வழங்கி ஆளும் கட்சியை நெருக்கடியில் இருந்து காப்பாற்றினார். இந்திரா காங்கிரஸ் இப்படியான ஒரு நெருக்கடிக்கு முகம் கொடுத்தது இதுதான் முதற்தடவையாகும்.

# பெனாசிர் பூட்டோ உண்ணாவிரதம்

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தான் இராணுவம் சிவிலியன்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதைக் கண்டித்து பாகிஸ்தான் மக்கள் கட்சித் தலைவரும் முன்னாள் பிரதமருமான பெனாசிர் பூட்டோ எதிர்கட்சிக் கூட்டணியுடன் இணைந்து உண்ணாவிரதப் போராட்டம் ஒன்றை ஆரம்பித்துள்ளார்.

பாகிஸ்தானில் பிரதமர் நவாப் ஷெரிப்பின் ஆட்சியின் கீழ் விசேட நீதிமன்றங்கள் அமைக்கப்படும் சட்டம் நிறைவேற்றப்பட்டதை எதிர்த்து நாடு முழுவதும் உள்ள பிரதான நகரங்களில் உண்ணாவிரதப் போராட்டத்திற்கு அழைப்புவிடுக்கப்பட்டுள்ளது பாகிஸ்தான் பாராளுமன்றக் கட்டிடத்திற்கு எதிரே நடைபெற்ற உண்ணாவிரதத்தில் பெனாசிர் பூட்டோவும் கலந்து கொண்டுள்ளார்.

## வாகன விபத்தில் ஒருவர் பலி

(யாழ்ப்பாணம்)

கச்சேரி - நல்லூர் வீதியில் நேற்றுக் காலை வான் ஒன்று மதிலுடன் மோதி விபத்துக்குள்ளாகியதில் வீதியால் சென்று கொண்டிருந்த மூத்த வினாயகர் கோயிலடியைச் சேர்ந்த காசிப்பிள்ளை செல்வரத்தினம் (வயது 56) என்பவர் பலியாகியுள்ளார். இச்சம்பவத்தில் வானில் வந்த இருவர் படுகாயமடைந்துள்ளதோடு வாகனமும் பலத்த சேதமடைந்துள்ளது. (மு 85)

## மீளக்குடியேற்ற மாநாடு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு நகரை உள்ளடக்கிய மண்முனை வடக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள அகதி முகாம்களில் தங்கியிருப்போரை மீளக்குடியேற்றுவது தொடர்பான மாநாடு நேற்று மட்டக்களப்பில் நடைபெற்றது.

**புல்லாவெளியில்**

லைத் தொடர்ந்து ஏற்பட்ட மோதல் பலமணிநேரம் நீடித்தது.

அதே சமயம் சிறிலங்கா விமானப்படை விமானங்கள் இராணுவத்தினருக்கு உதவியாக கடும் குண்டு வீச்சுத் தாக்குதலை மேற்கொண்டன. இருந்தும் இம் மோதலின் போது சில காவலரணகள் புலிகளால் தாக்கி அழிக்கப்பட்டன அதிலிருந்த பல இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். பலர் படுகாயம் அடைந்தனர்

புலிகள் தரப்பில் இருபத்தொரு போராளிகள் வீரமரணமடைந்தனர்.

**கோண்டாவிலில்**

ஹெலன் தேவநாயகம் இளவாலை), நிரேதா (தீபச் செல்வி சிவபாதம் திருமலை), சுதா (சுந்தையா குணநாயகம் கிரான் மட்டக்களப்பு), கேதீஸ் (சுப்பிரமணியம் விஜயதாசன்-பொன்னாலை), உதயன் (முருகேசு குமாரசாமி - மட்டுநகர்), நிசாந்தன் (இளையதம்பி பிறேப்சிறி-நல்லூர்), மதிவாணன் (தர்மலிங்கம் கணேஸ்வரன் - சங்கானை), ஆகிய மாவீரர்களின் புகழுடல்களுக்கு பல்லாயிரக்கணக்கான மக்கள் கண்ணீர் மல்க தமது இறுதி அஞ்சலியைச் செலுத்தினர். பின் நிகழ்ந்த இரங்கல் கூட்டத்தில் தேவர், மு. வே. யோ. வாஞ்சிநாதன், தனபால், ரூபலதா ஆகியோர் உரையாற்றினர். அதைத் தொடர்ந்து 5-15 மணியளவில் பண்ட் வாத்திய இசையுடன் மாவீரர்களின் புகழுடல்கள் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டு கோப்பாய் மாவீரர் மயானத்தில் தீயுடன் சங்கமமாகின. (43)

**ஆனையிறவு**

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

★ யசோ (லோகேஸ்வரன் சுதாகர் மானிப்பாய் வீதி, ஓட்டுமடம்)
★ அனுசன் (தேவசகாயம் குணம் 10-3 டேவிட் றோட் குருநகர்)
★ சங்கர் (வடிவேல் ஜெயந்திரன் நாவற்குழி சந்தி நாவற்குழி)
★ வீரவன் (சிவன் சந்திரன், சீனன்குடா, கப்பல்துறை திருமலை)
★ வேல்விழி (சமலா இராசமாணிக்கம் ஆதிகோயிலடி, வல்வெட்டித்துறை)
★ நளா (லலிதாதேவி நடராசா புங்குடுதீவு மேற்கு புங்குடுதீவு)
★ சுபத்திரா (புவனேஸ்வரி சுந்தர் மட்டுவில் தெற்கு சாவகச்சேரி)
★ சூரியகலா (குமுதினி நடராசா, செல்வாயில் றோட் கரவெட்டி பத்தி, கரவெட்டி)
★ ரூபிகா (வினோதா வேலாயுதப்பிள்ளை குழவிசுட்டான், நெடுங்கேணி)
★ சுஜந்தா (இந்திராணி மணியம், விலாசன் தோப்பு இரணைமடு, கிளிநொச்சி)
★ ஜஸ்மின் (சத்தியமலர் சின்னத்தம்பி அல்லாரை வடக்கு, கொடிகாமம்)
★ அனுசா (ஜெசித்தா குமாரசாமி ஏழாலை தெற்கு, ஏழாலை)
★ நிருபா சதாசிவம் சரோஜினி பெரிய கல்லாறு மட்டுநகர்)
★ அல்பிரட் சின்னத்துரை யோசப் கெனடி கரம்பன் கிழக்கு ஊர்காவற்றுறை)
★ நியாஸ் (செல்வரட்ணம் சங்கர் கைதடி, நுணாவில், சாவகச்சேரி)
★ றெனோ ஜெயசிங்கம் மதியழகன் கைதடி நுணாவில், சாவகச்சேரி
★ செனித் குமாரசாமி திருவேகரன் ஏழாலை மத்தி, ஏழாலை
★ கர்ணன் (நவரட்ணம் செல்லர் தவேந்திரன் 1 ஆம் கட்டை, பருத்தித்துறை
★ தயாளன் (சிவகுருமோகன சுந்தரம் அலிகள் போட்ட குளம், ஓமந்தை)
★ அலிஸ்ரன் (தியாகராசா கிருஸ்ணபாலன் 4 89 4ஆம் கிராமம் சென்றல் முகாம் அம்பாறை)

# பொதுப்பணியகம் கலந்துரையாடல்

போராளிகளின் மருத்துவப் பராமரிப்புச் சம்பந்தமாக கரங்கள் பொதுப் பணியகம் மந்திகையில் அமைக்கப்பட்டுள்ளது,

சகல தரப்பு பிரதிநிதிகளுக்குமான கலந்துரையாடல் கூட்டம் நாளை 07 - 08 - 91 புதன்கிழமை 4.00 மணிக்கு மேற்படி பணிமனையில் நடைபெறும். இக்கலந்துரையாடலில் வடமராட்சிக்குள் உட்பட்ட சாரணர் இயக்கம், தமிழீழ தேசிய ஆசிரியர் ஒன்றியம், போரூட் செஞ்சிலுவைச் சங்கம், கூட்டுறவு அமைப்புக்கள், மாணவர் இயக்கம், முறைசாராக் கல்விப் பிரிவு, தனியார் கல்வி நிறுவன ஒன்றியம், தனியார் பேருந்து ஒன்றியம், கடற்தொழிலாளர் ஒன்றியம், வர்த்தகர் சங்கம், சிகை அலங்கரிப்பாளர் ஒன்றியம், சனசமூக நிலையங்களின் ஒன்றிய பிரதிநிதிகள், வட்டவை சிற்றூராவைத்தலைவர்கள் ஆகியோரை சமுகமளிக்குமாறு விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி வடமராட்சிப் பிரிவு வேண்டிக்கொள்கிறது.

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்திலுள்ள அனைத்து சனசமூக நிலையங்களின் தலைவர்கள், செயலாளர்கள் கலந்துரையாடல் கூட்டம் ஒன்று எதிர்வரும் 10-ஆம் திகதி காலை 10-30 மணியளவில் யாழ் இந்துக் கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் அரசியற் பொறுப்பாளர் மூர்த்தி இவ்வாலோசனைக் கூட்டத்தில் கலந்து கொள்கிறார் இக்கலந்துரையாடலில் சனசமூக நிலையங்களின் செயலாளர்களையும், தலைவர்களையும் கலந்து கொள்ளுமாறு பிரதேச உ. உ. ஆணையாளரின் செய்திக்குறிப்புஒன்றுகோருகின்றது

## ஆசிரியர் இடமாற்றம்

கிளிநொச்சி, வவுனியா, முல்லைத்தீவு. மன்னார் போன்ற இடங்களில் ஆசிரிய சேவையில் ஈடுபட்டுள்ள ஆசிரியர்களில் 32 பேர் யாழ் மாவட்டப் பாடசாலைகளுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்

இவர்களது இடமாற்றக் கடிதம் வடகிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளரினால் நேற்றைய தினம் 5.08.91) யாழ் கல்விப் பணிப்பாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

## தேவைக்கு ஏற்ற அரிசி இறக்குமதி

தேவையான அளவு அரிசி மட்டுமே இனிமேல் இறக்குமதி செய்யப்படும் என கூட்டுறவு அமைச்சு அறிவித்துள்ளது

நாட்டின் தேவைக்கும் மேலாக அரிசியை இறக்குமதி செய்து செலாவணியை விரயமாக்கும் நடவடிக்கைக்கு முற்றுப் புள்ளி வைக்கவே இவ்வாறு கட்டுப்பாடு விதித்திருப்பதாக கூட்டுறவு அமைச்சு தெரிவித்தது.

**கர்நாடக**

கைதானதை அடுத்து இலங்கைத் தமிழர் தங்கியிருக்கும் விபரத்தைப் பதிவு செய்யவும் முறைப்படுத்தவும் அவசியம் ஏற்பட்டிருக்கிறது என்றும், தமிழகத்தில் இலங்கைத் தமிழர்கள் பதிவு செய்யப்படும் முறை குறித்து அறிந்து கொள்வதற்காக தமிழக அரசுக்கு கடிதம் எழுதவிருப்பதாகவும் கூறியுள்ளார்.

**மக்கள்**

அண்மைக்காலமாக தென்மராட்சி பகுதியில் ஏற்பட்டுள்ள பாதுகாப்பற்ற சூழ்நிலையால் இவ்வாறு மாற்றப்பட்டுள்ளதாகவும் அங்கு தெரிவிக்கப்பட்டது. (லோ)

# யூக்கோ. பேரழிவை நோக்கிச் செல்கின்றது

(பெல்கிரட்)

யூகோஸ்லாவியா பேரழிவை நோக்கிச் சென்று கொண்டிருப்பதாக ஐரோப்பிய பொருளாதார சமூக நாடுகளின் வெளிநாட்டமைச்சர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

யூகோஸ்லாவியாவில் யுத்த நிறுத்த முயற்சிகள் தோல்வி அடைந்ததை தொடர்ந்து இக்கருத்தை அவர்கள் வெளியிட்டனர்.

கடந்த சனிக்கிழமையன்று ஆரம்பித்த யுத்த நிறுத்த முயற்சிகளே தோல்வியடைந்துள்ளன. யூக்கோ ஜனாதிபதி பீடம் கடந்த சனியன்று குரோசியாவுடன் யுத்தநிறுத்தம் பிரகடனம் செய்தது. எனினும் அக்குடியரசின் கொந்தளிப்பான கிழக்குப் பிராந்தியத்தில் ஓயாது வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன. நேற்று முன் தினம் யூகோஸ்லாவியாவின் பல இடங்களில் சண்டை நடந்தது. குரோசிய காவல்படையினர் அறுபது பேர் கொல்லப்பட்டனர்.

யூகோஸ்லாவிய ஜனாதிபதி பீடத்திற்கும். ஐரோப்பிய பொருளாதார சமூகத்திற்கும் இடையே நடைபெற்ற பேச்சுக்களை செர்பியாவும், அதன் ஆதரவாளர்களும் பகிஷ்கரித்தமையால் சமாதானப் பேச்சுகள் முறிவடைந்தன.

# ஜோசாட் பதிவியிலிருப்பது அரசியல் சட்டத்திற்கு முரண்

## - உயர்நீதிமன்றத் தீர்ப்பு

லண்டன்)

கமறூஸ் நாட்டில் ஜனாதிபதி செய்யட் முகமெட் ஜோசாட் பதிவியிலிருப்பது அரசியல் சட்டத்துக்கு மாறானது என்று அந்நாட்டின் உயர் நீதி மன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது. இதே வேளை, இப்ுஹகிம் அகமெட் ஹெதீதி என்ற நீதி மன்றத் தலைவரை நாட்டின் எதிர்கால ஜனாதிபதியாகவும் நீதி மன்றம் ஆணை பிறப்பித்துள்ளது

நீதிமன்றத்தின் இத் தீர்ப்பைத் தான் ஏற்க முடியாது என ஜனாதிபதி ஜோசாட் அறிவித்துள்ளார். எதிர்க்கட்சிகள் நீதி மன்றத்தின் தீர்ப்பைப் பாராட்டியுள்ளன.

## 83 கோடி 70லட்ச. மானியம்

(கொழும்பு)

ஜப்பான் 83 கோடி 70 லட்சம் ரூபாவை இலங்கைக்கு மானிய உதவியாக வழங்கியுள்ளது என்று நிதி அமைச்சு தெரிவித்துள்ளது.

இரு திட்டங்களுக்கென இந்த உதவியை ஜப்பான் மானிய உதவியாக வழங்கியுள்ளதாக நிதி அமைச்சின் செயலாளர் ஆர். பாஸ்கரலிங்கம் தெரிவித்தார்.

**2 கவச வாகனங்கள்**

அடைந்தனர். ஒரு பவல் கவச வாகனம் உட்பட இரு கவச வாகனங்கள் சேதமடைந்தன.

அதேவேளை விமானப்படை விமானங்களும் இராணுவத்தினருக்கு உதவியாக கடும்குண்டு வீச்சுத் தாக்குதலை மேற்கொண்டன. முகாமிலிருந்து பரவலான எறிகணைத் தாக்குதலும் மேற்கொள்ளப்பட்டது.

நேற்று முன்தினம் ஆரம்பித்த மோதல் நேற்றும் தொடர்ந்த வண்ணமுள்ளது. இச் செய்தி அச்சுக்குப் போகும் வரை தொடர்ந்து மோதல்கள் இடம்பெற்றவண்ணமுள்ளன. இம் மோதல்கள் முகாமையண்டிய குறிஞ்சாத்தீவுப் பகுதியிலேயே இடம் பெற்று வருகின்றன. இம்மோதலிலும் இராணுவத்தினருக்கு பெரும் இழப்புக்கள் ஏற்பட்டுள்ளன.

# மரண அறிவித்தல்கள்

## திருமதி அன்னலட்சுமி மாசிலாமணி

மாதகல் கிழக்கைச்சேர்ந்த திருமதி அன்னலட்சுமி மசிலாமணி காலமானார். இவர் வினாசித்தம்பி மாசிலாமணியின் அன்பு மனைவியும், தயாசலா, ஜெயாசலா, விஜயநிர்மலா, அசோக்குமார், இராஜகுமாரி ஆகியோரின் அன்புத் தாயாரும், சங்கானை தொட்டிலடியைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை பொன்னம்மா தம்பதிகளின் அன்பு மகளுமாவார். அன்னாரின் ஈமக் கிரியைகள் 04-08-91 ஞாயிற்றுக்கிழமையன்று மாதகல் போதி மயானத்தில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் தயவு செய்து ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

மாதகல் கிழக்கு,
மாதகல். (R/1618)

தகவல்:
வி.மாசிலாமணி

## திருமதி செல்லையா சின்னத்தங்கம்

(கே. கே. எம். மில் உரிமையாளர்)

கொடிகாமம் புகையிரத வீதியைச் சேர்ந்த திருமதி செல்லையா சின்னத்தங்கம் அவர்கள் 05-08-91 நேற்று காலமாகிவிட்டார். அன்னார் காலஞ்சென்ற செல்லையாவின் அன்பு மனைவியும், இராசேஸ்வரி, கயிலாயர் ஆகியோரின் அன்புத் தாயாரும், செல்லத்துரை (ஓய்வு பெற்ற ஆசிரியர்), லீலாதேவி ஆகியோரின் மாமியாரும், வதனாகரன் (ஜேர்மனி), வதனகுமாரி, மஞ்சுளா (யா/சாவகச்சேரி இந்துக்கல்லூரி மாணவிகள்), செந்தூரன் (கொழும்பு பம்பலப்பிட்டி இந்துக்கல்லூரி மாணவன்), மேனகா, மூவேந்தன் ஆகியோரின் பேத்தியாருமாவார்.

அன்னாரின் பூதவுடல் ஈமக்கிரியைக்காக 06-08-91 இன்று செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு அன்னாரின் இல்லத்திலிருந்து கொடிகாமம் கட்டைபறித்தான் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்ளுகின்றேன்.

"கயிலாயகிரி"
புகையிரத வீதி,
கொடிகாமம்.

தகவல்:
செ. கயிலாயர் (மகன்)
(B/2912

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்'' பணிமனையில் 1991 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 06 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.